DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Spl Sessions Case No. 38-2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 23**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிவேல் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 02.12.2025

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திட்டச்சேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.09.2021ந் தேதி வேதாரண்யம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த மனோகரன் த/பெ. சிதம்பரம் என்பரிடம் வாக்குமூலம் பெற முற்பட்டபோது அவர் பேச முடியாத நிலையில் இருந்ததால் அவருடனிருந்த அவரது அண்ணன் பாலகிருஷ்ணன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் இந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது (அ.சா.ஆ.7ஐ குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பு வழக்கறிஞர் அ.சா.1 பாலகிருஷ்ணன் முதல் விசாரணையில் இந்த கையெப்பம் தன்னுடையது அல்ல என்று மறுத்துவிட்டதால் மேலே புகார் வாக்குமூலத்தில் உள்ளது தன்னால் சொல்லப்பட்டது என்பதால் இது ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). அதில் தனது தம்பி 05.09.2021ந் தேதி இரவு தனது மனைவியிடம் கோபித்துக்கொண்டு

வீட்டை விட்டு வெளியே சென்றதாகவும், அப்போது மழை இருந்ததால் மாதா கோவில் உண்டியல் அருகே வெல்டிங் பட்டறையில் ஒதுங்கி நின்றபோது அங்கு பேசிக்கொண்டிருந்த தமிழ்செல்வம் த/பெ. மகேஷ்வரன், பசுபதி தேவன் மகன் என்பவரும் பேசிக்கொண்டிருந்தார்கள் அப்போது நீ யாரப்பா என்று கேட்க அவர் ஏதாவது பேச மகேஸ்வரன் மகன் அவரது கன்னத்தில் அறைந்துவிட்டார் அப்போது அங்கிருந்த இரும்பு கம்பியை எனது தம்பி எடுத்து அடிக்க முற்படும்போது அந்த கம்பியைபிடுங்கி மேற்படி பசுபதி தேவர் மகன் கம்பியால் அடித்துவிட்டார். அவர் சத்தம்போடவே குச்சி மவனே, தேவுடியா மவனே உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி சென்றுவிட்டனர் என்று அவரது அண்ணன் பாலகிருஷ்ணன் என்பவர் உதவியுடன் இருச்சக்கர வாகனத்தில் கருப்பம்புலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீட்டிற்கு வந்துவிட்டனர். மறுநாள் 06.09.2021ந் தேதி காலையில் பார்த்தபோது முகம் மிகவும் வீங்கி இருந்ததால் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தனர். பின்பு அண்ணன் பாலகிருஷ்ணன் என்பவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் வேதாரண்யம் காவல் நிலைய குற்ற எண் 561/2021 சட்டப்பிரிவு 294(பி), 324, 506(2) இ.த.ச. படி வழக்கு பதிவு செய்து ஆய்வாளரின் மேல் விசாரணைக்காக வைத்தேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை ஆய்வாளர் விசாரிக்க நடந்த விபரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 பாலகிருஷ்ணன் உங்களால் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.7 உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும் அதிலுள்ள விபரங்கள் தன்னால் சொல்லப்பட்டது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்தது 05.09.2021 நடந்தது என்றும் மறுநாள் காலை 06.09.2021ந் தேதி முதல் தகவல் அறிக்கை பெறப்பட்டது என்றும் சொன்னால் சரிதான். அச்சிடப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 07.09.2021ந் தேதி காலை 11.00 மணிக்கு தான்

வேதாரண்யம் நீதிமன்றத்திற்கு சென்றுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையினுடைய நகல் புகார் வாக்குமூலம் தந்தவருக்கு நகல் தந்ததாக எதுவும் இல்லை. என்னுடைய வாக்குமூலத்தில் சாதியை இழிவுப்படுத்தி பேசியதாக இல்லை. பாலகிருஷ்ணன் தன்னுடைய புகார் வாக்குமூலத்தில் தன்னுடைய தம்பிக்கு வாய் பேசமுடியதவர் என்று சொல்லிருக்கிறார் என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் என்னிடம் இந்த வழக்கு தொடர்பாக எழுத்து பூர்வமாக புகார் மனு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எங்களுடைய புகார் வாக்குமூலம்படி பாலகிருஷ்ணன் தம்பி தன்னுடைய மகள் மற்றும் மனைவியிடம் சண்டைபோட்டுவிட்டு வீட்டை விட்டு வெளியே சென்றார் என்றால் சரிதான். அ.சா.ஆ.7, 8 நான் சொன்ன நேரத்தில் பதியப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Spl Sessions Case No. 38/2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 22**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 02.12.2025

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் தலைஞாயிறு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வேதாரண்யம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வந்தபோது கடந்த 08.09.2021ந் தேதி எனக்கு வேதாரண்யம் காவல் நிலைய குற்ற எண் 561/2021 குற்ற வழக்கில் இறந்துபோன மனோகரன் என்பவரது உடலை பிண கூராய்வு செய்யும் பணிக்கு நியமிக்கப்பட்டு நான் அன்று திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி வேதாரண்யம் காவல் துணை கண்காணிப்பாளர் திரு. முருகவேல் அவர்கள் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிணவறையில் இவ்வழக்கில் இறந்துபோன மனோகரன் என்பவரது உடலின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் மதியம் 1.00 முதல் 4.00 மணிவரை பிரேத விசாரணை செய்து மேற்படி மனோகரனின் உடலை பிண கூராய்விற்காக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதத்தையும், அதற்கு பணி நியமிக்கப்பட்டதற்கு எனக்கு கடவு சீட்டும் மாலை 4.10 மணிக்கு

மேற்படி துணை காவல் கண்காணிப்பாளர் வழங்கினார்கள். நான் அந்த வேண்டுகோள் கடிதத்தை எடுத்துக்கொண்டு உடனடியாக அங்கிருந்து மருத்துவர் திரு. நவீன் அவர்களிடம் ஒப்படைத்தேன். மேற்படி மருத்துவர் மாலை நேரமாகிவிட்டதால் இதற்கு மேல் பிண கூராய்வு செய்ய இயலாது எனவும் அதனால் மறுநாள் காலையில் வருமாறு கூறினார். அவர் கூறிய உத்தரவை இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு கூறிவிட்டு காவல் நிலையம் திரும்பினேன். மறுநாள் 09.09.2021ந் தேதி காலை புறப்பட்டு திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று காலை 11.00 மணிக்கு பிண கூராய்வு செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம் ஒப்படைத்தேன். மேற்படி மருத்துவர் நவீன் அவர்கள் வேண்டுகோளின்படி பிணவறையில் இருந்த இறந்துபோன மனோகரன் என்பவரின் உடலை மருத்துவருக்கு அடையாளம் காட்டினேன். மருத்துவர் அன்று காலை 12.25 மணிமுதல் சுமார் ஒன்றரை மணிநேரம் மனோகரன் உடலை பிண கூராய்வு செய்தார்கள். பிண கூராய்வு செய்யும்போது நான் உடனிருந்தேன். பிண கூராய்வு முடிந்து மருத்துவர் பிரேதத்தையும் மனோகரன் அணிந்திருந்த கைலி ஒன்றையும் என்னிடம் ஒப்படைத்தார்கள். இரண்டையும் பெற்றுக்கொண்டு பிரேதத்தை இறந்தவரின் குடும்பத்தினர் குலவழக்கப்படி நல்லடக்கம் செய்ய வேண்டி இறந்தவரின் மகன் டேவிட் என்பவரிடம் ஒப்புதல் பெற்று ஒப்படைத்தேன். பின்பு காவல் நிலையம் வந்து மனோகரனின் கைலியை தனி அறிக்கையுடன் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன். அதன்பிறகு 15.09.2021ந் தேதி எனக்கு வழங்கப்பட்ட பணியின்படி நான் திருவாருர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று மருத்துவமனையில் மருத்துவரால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த மனோகரனின் உடல் உள்ளுறுப்புகளை பெற்றும், அவர் தந்த வேண்டுகோள் கடிதத்தையும்

பெற்றுக்கொண்டு அன்றைய தினமே தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகம் சென்று ஒப்படைத்து காவல் நிலையம் வந்தடைந்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.